**அனுப்புநர்** **பெறுநர்**

இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்.

**ந.க.எண். 011666 /டி(3) /2024** **நாள் : 03.09.2024**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு – அக்டோபர் 2024 – தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (மெட்ரிக்/ CBSE/ICSE–உட்பட) – பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு தொடர்பாக அறிவுரைகள் மற்றும் உள்ளூர் ஊடகங்களில் செய்திக்குறிப்பு வெளியிட கோருதல் – சார்பு.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண்89, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1) துறை, நாள்.14.07.2022
2. இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள். 03.09.2024.

******

பார்வையில் காணும் அரசாணையின்படி தமிழ்மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திகொள்ளும் வகையில் 2024–2025 கல்வியாண்டிற்கான "தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு" தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகைப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு (மெட்ரிக்/CBSE/ICSE–உட்பட) நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 1500 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை வழியாக மாதம் ரூ.1500/– வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப்பள்ளி மாணவர்களும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப்பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்களும் (மெட்ரிக் / CBSE/ICSE–உட்பட) பொதுவான போட்டியில் தெரிவு செய்யப்படுவார்கள்.தமிழ்நாடு அரசின் பத்தாம் வகுப்பு தமிழ்பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் தேர்வு நடத்தப்படும்.

பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகச் செய்திகுறிப்பின்படி 19.10.2024(சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (மெட்ரிக்/CBSE/ICSE–உட்பட) www.dge.tn.gov.inஎன்ற இணையதளம் மூலமாக விண்ணப்ப படிவத்தினை 05.09.2024 முதல் 19.09.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளவும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களிடம் / முதல்வர்களிடம் தேர்வு கட்டணம் ரூ.50/– வுடன் 19.09.2024–க்குள் ஒப்படைக்க வேண்டும் என அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு (மெட்ரிக்/CBSE/ICSE–உட்பட) பள்ளித் தலைமை ஆசிரியர் / முதல்வர்களுக்கு தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வுக்கு விண்ணப்பித்தல் குறித்து உரிய அறிவுரைகள் வழங்குமாறும், தேர்வு தொடர்பான அறிவிப்பினை மாணவர்கள் அறியும்வண்ணம் அனைத்து பள்ளிகளிலும் அறிவிப்பு பலகையில் ஒட்டவும், அதிக எண்ணிக்கையிலான தேர்வர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறும் தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இது குறித்து உள்ளூர் நாளிதழ்களில் பொதுமக்கள் / மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தியாக வெளியிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு**

1. பார்வையில் காணும் அரசாணை (நகல்)
2. செய்திக்குறிப்பு

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/மெட்ரிக்)
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது